# சுவர்க்க நகைகளா? அல்ல, அது நரக விலங்குகள்!

## ('சுவர்க்க நகைகள்' பற்றிய ஆராய்ச்சி)

*தொகுப்பு:* மௌலானா மௌலவி அல்ஹாஜ் அல்முஹிப்பிர் ரஸூல் அஷ்ஷாஹ் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹழ்ரத் காஹிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்

**என்னுரை.**

நூல்நூலாகப் பற்பல நூதனங்கள் நடமாடிக் கொண்டிருக்கின்றன நம் நாட்டில். இந்நேரம் 'சுவர்க்க நகைகள்' என்ற ஒரு நூல் நம்மவர் கைக்கு எட்டியதும் என் பார்வைக்கு விடப்பட்டது. மார்க்கப் பெரியார்களென்ற பல உலமாக்கள் அந்த நூலுக்கு மதிப்புரையும், பதிப்புரையும் எழுதியிருப்பது கண்டேன். ஆனால், அந்த நூலின் உர்து மூல நூலாசிரியரின் கொள்கையைப் பற்றியும், அவரைப் பற்றியும், அவரது நூல்களைப் பற்றியும் மேன்மை தங்கிய உலமாக்கள் வழங்கியுள்ள மார்க்கத் தீர்ப்புகள் பற்றியும் ஆராயுமிடத்து மேல்படி '**சுவர்கக் நகைகள்** 'என்ற நூல் முஸ்லிம்களுக்கிடையில் நடமாடிக் கொண்டிருந்தால் முஸ்லிம்கள் வழி கெட்டுவிடவார்கள் என்பதை உணர்ந்தே அதனை அலசி ஆராய்ந்து உண்மையை மக்களிடையே உணர வைக்க நாடினேன். ஆகவே, இறைவனுக்காக செய்யும் எனது கடமையாக இச் சிறு நூலை அச்சிட்டு வெளியிடுகிறேன் என்பதையும், இதில் ஒவ்வொரு பிரதி மேற்படி நூலுக்கு மதிப்புரையும், பதிப்புரையும் வழங்கியுள்ள உலமாக்களுக்கும் சமர்ப்பிக்கிறேன் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புவதோடு, மக்கள் உண்மையை உணர்ந்து தத்தம் ஈமானை பேணி வாழ்வார்களென நம்புகிறேன்.

**29-12-67.**

இவ்வண்ணம்,

முஸ்லிம்களின் ஊழியன்,

**தொகுப்பாசிரியர்.**

ஸைலான்-தென்திசை வாழ் 'பாவலர் மஜ்லிஸு முஹிப்பிற்றஸூல்' மனம் கனிந்தளித்த சிறப்புரை (பா)

புகழ் சிறந்த நபி மேல் 'வஹ்ஹாபிக்

குழு' வினோர் குறைகள் பல விண்டு

இகழ்படிந்த நூல் பலதைப் பரப்பி நின்று

குபிரிலே மாந்தரை வீழ்த்தல் கண்டு

புகழ் சுரந்த காயல் பதி தரு நம் ஷெய்கு

காமில் ஸூபி அப்துல் காதிராலிம்

திகழ் மிகுந்த தீன் வழியை மாந்தர்க் கோதி

வருமிந்த முயற்சிக்கு இறையே அருள்.

786

முபஸ்மிலன் முஹம்திலன் முஸல்லியன் முஸல்லிமா அலந்நபி வஆலிஹி வஸஹ்பிஹி முஅள்ளிமா.

சோதரீர்!

'சுவர்க்க நகைகள்' என்று ஒரு நூல் எம் பார்வைக்கு வந்தது. அதை திருநெல்வேலி 'முன்னேற்றம்' அச்சகத்தின் அதிபர் மவுலவி அபுல் ஹஸன் சாதுலி அவர்கள் பல பெரியார்களிடம் சிறப்புரைகளும், மதிப்புரைகளும் வாங்கி தானும் பதிப்புரை எழுதித் தனது அச்சகத்தில் அச்சிட்டு வெளியாக்கியிருக்கிறார். அவர் தனது பதிப்புரையில்---

இந்த நூலின் சிறப்பைப் பற்றி தமது தந்தை அவர்கள் மூலமாகவும், வேறு பல பெரியார்கள் மூலமாகவும் கேள்விபட்டதோடு அதன் பல பகுதிகளையும் கவனித்தபோது, எப்படியும் அல்லாஹ்வின் உதவியால் தமிழில் கொண்டுவர வேண்டுமென்று நீண்டகாலமாக ஆலோசித்து முடிவு செய்து பலரையும் வேண்டியதாகவும் இறுதியாக திருச்சி எஸ்.ஏ. ரஸூல் அவர்களைக் கொண்டு மொழிபெயர்த்து, மூலநூலின்'கொள்கை விளக்கம்', ஹதீதில் வந்த சில சரித்திரக் குறிப்புக்கள் ஆகியவைகளை மட்டுமே முதலாம் பாகமாகத் தொகுத்து வெளியிடுவதாகவும், இந்த வெளியீடு முக்கிய நூலாக இருப்பதால் இதன் கையெழுத்துப் பிரதியை சுருக்கமாக எழுதி 1) சித்தையங்கோட்டை மவ்லானா மவுலவி என்.எஸ். ஹுஸைன் முஹம்மது(பாக்கவி) அவர்கள், 2)உத்தமபாளையம் மவுலவி பி.எஸ்.கே. முஹம்மது இபுறாகிம் (பாகவி) அவர்கள் 3) கம்பம் மவ்லவி அப்துல் கனி சாகியு(பாக்கவி) அவர்கள் ஆகியவர்களிடம் சமர்ப்பித்து அவர்கள் மூலு நூலுடன் ஒத்துப்பார்த்து சில திருத்தங்கள் செய்து கொடுத்ததாகவும், இந்த மொழிபெயர்ப்பை 5) மவுலவி அல்ஹாஜ் ஜியாவுத்தீன் அஹ்மது அமானி ஹளரது அவர்களிடம் நேரில் கொண்டு காட்டியபோது ரெம்ப சந்தோசப் பட்டு பலபக்கங்களை வாசிக்கும்படி சொல்லி பின்னர் வாழ்த்துரை நல்கினார்களென்றும், இந்த நூல் அச்சிட்டு முடிந்ததும் மூல நூலாசிரியரின் கலீபாவாகிய 6) சீரனூர் மவ்லானா மவுலவி முஹம்மது ஸயீது ஹளறது அவர்களிடமும் 7) உத்தமபாளையம் மவ்லானா மவுலவி எஸ்.எஸ். அப்துல் காதிர் (பாக்கவி) அவர்களிடமும் 8) தஞ்சை ஜில்லா பொதக்குடி, அன்நூருல் முஹம்மதிய்யு மத்ரஸாவின் போராசிரியர்களிடமும் காட்டியபோது அவர்களும் மிக மகிழ்ச்சியடைந்து தங்களின் மதிப்புரைகளதை தந்துதவினார்களென்றும் 9) பேட்டை '**றஹ்மத்**' மாத இதழ் ஆசிரியர் மவ்லானா **மவுலவி பீ.ஏ. கலீலுற் றஹ்மான் சாகிபு (ரியாஜி)** அவர்கள் இந்த மொழிபெயர்ப்பு சம்பந்தமாக கடைசி வரையும் பூரணமாக ஒத்துழைத்தார்கள் என்றும் எழுதி இவர்கள் எல்லோர்களாலும் கொடுக்கப்பட்டதாகக் காட்டப்பட்ட மதிப்புரைகளையும் எழுதி அச்சிட்டுக் காட்டியிருக்கிறார்.

**'சுவர்க்க நகைகள்' பற்றிய ஆராய்ச்சி:**

மூல நூலான உருது 'பிஹிஸ்திஜேவர்' உடன் இந்த மொழி பெயர்ப்பை ஒத்துப் பார்த்தோம். பல இடங்களில் மொழிபெயர்ப்பு சரியாக இல்லை. உதாரணமாக-உருது மூல நூலில், 'குப்ரு அவுற் ஷிர்கீ பாதோங்கா-பயான்' என்ற தலையங்கத்திற்கு மேற்படி சு.ந. 74-ம் பக்கத்தில் 'குப்ர்,ஷிர்கு சம்பந்தமான விளக்கம்' என்று மொழிபெயர்க்கபட்டிருப்பது பிழையாகும். குப்ர், ஷிர்குக்குப் பொருள் சொல்லி குப்ரு என்றால் இன்னது, ஷிர்கு என்றால் இன்னது என்று விளக்கிக்காட்டப்படவில்லை. குப்ர், ஷிர்க்கை உண்டாக்கக் கூடிய கருமங்களைத்தான் விபரிக்கப்படுகிறது. எனவே, **'குப்ரு அவுற்-ஷிர்கீ-பாதோங்கா பயான்'** என்ற தலையங்க வாசகத்திற்குச் சரியான பொருள் 'குப்ரு இன்னும் ஷிர்குடைய கருமங்களைப் பற்றிய விளக்கம் என்பதாகும். அதாவது:- என்னென்ன கருமங்களினால் மனிதன் காபிராக, முஷ்ரிக்காக ஆகிவிடுவானோ அதைப்பற்றிய விளக்கம் என்பதாகும். 2) உருது மூல நூலில், 'குப்ருகூ பஸந்து கர்னா' என்ற வார்த்தைக்கு சு.ந. 74ம் பக்கம் 2ம் வரியில் 'குப்ரு சம்பந்தமான செயல்களை பிரியம் வைப்பது' என்று எழுதியதும் பிழையாகும். அதற்குச் சரியான பொருள்:- 'குப்ரியத்தான கருமங்களை பிரியம் வைப்பது' என்பதாகும். குப்ரியத்தான கருமம் செயலாக இருந்தாலும் சரி அல்லது பேச்சாக இருந்தாலும் சரியே. 3) உருது மூல நூலில் 'குப்ருகீ பாதோங்கூ அச்சாஜான்னா' என்பதற்கு சு.ந. 74ம் பக்கம் 3வது வரியில் -'குப்ரியத்தான பேச்சுகளை நல்லதெனக் கருதுவது' என்று மொழிபெயர்த்திருப்பதும் விழையாகும். அதற்குச் சரியான பொருளாவது-'குப்ரியத்தான கருமங்களை நல்லதெனக் கருதுவது' என்பதாகும். குப்ரியத்தான கரும் பேச்சாக இருந்தாலும் சரி, அல்லது செயலாகயிருந்தாலும் சரியே. 4) உருது மூல நூலில்,'கிஸீ-தூஸரேஸே-குப்ர்கீ கொயீ-பாத்கறானா' என்பதற்கு சு.ந. 74ம் பக்கம் 4ம் வரியில்,' பிறரைக் கொண்டு குப்ரியத்தான பேச்சுகளைப் பேசச் செய்வது' என்று எழுதியதும் பிழையாகும். அதற்குச் சரியான பொருளாவது- வேறெவரைக் கொண்டாவது குப்ரியத்தான எந்த கருமத்தையாவது செய்ய வைப்பது' என்பதாகும். பிறரைக் கொண்டு குப்ரியத்தான வார்த்தையைச் சொல்லச்சொன்னாலும் சரி அல்லது குப்ரிய்யத்தான செயலைச் செய்ய வைத்தாலும், செய்யும்படி சொன்னாலும் சரியே 5) உருது மூலநூலில்-'ஆலம்கே-காறுபாறுகு-ஸிதாறோங்கி-த.்.தீர்ஸே ஸமஜ்னா' என்ற வார்த்தைக்கு சு.ந.77ம் பக்கம் 6ம் வரியில் '(ஆலிம்) அறிவாளிகளது செயல்களை நட்சத்திரங்களின் பலன் என்று கருதுவது' என்று எழுதியதும் பிழையாகும். அதற்குச் சரியான பொருளாவ '(ஆலத்தில்) உலகத்தில் நடக்கிற காரியாதிகளெல்லாம் நட்சத்திரங்களின் குணபாட்டைக் கொண்டேயாகிறது என்று கருதுவது' என்பதாகும்.

**மூல நூலாசிரியரைப் பற்றிய ஆராய்ச்சி:**

மேல்படி சு.ந. ஆசிரியரும் அந்த நூலுக்கு மதிப்புரை-சிறப்புரை-பதிப்புரை எழுதியவர்களும் அந்த நூலின் மூல நூலாசிரியரான அஷ்ரப் அலி தானவி அவர்களைப் பற்றி ஹகீமுல் உம்மத்து, ஞானக் கடல் என்றும், 'மவ்லானா அவர்களிடம் கல்வி கற்கவும், மார்க்க ஞானம் பெறவும் மனிதவர்க்கம் மட்டுமில்லாது ஜின்வர்க்கமும் வந்து கொண்டிருந்தது என்றும், மவ்லானா

அவர்களிடம் பைஅத்துச் செய்து கொண்டவர்கள் ஆயிரக்கணக்கானோர். இவர்களில் கலீபாக்களாக(பிரதிநிதிகளாக) உள்ளவர்கள் மட்டும் 162 பேர். இதிலே இன்று (கி.பி.1955) வரை எடுத்த கணக்குப்படி இறந்தவர்கள் 44. புகழுடன் இறந்தவர்கள் 17. உயிரோடிருப்பவர்கள் 53 உயிரோடு இருந்து இன்றுவரை மக்களுக்குத் தொண்டுபுரிந்து கொண்டிருப்பவர்கள் 48 என்றும், மவ்லானா அவர்களின் முரீதுகள் உலகத்தின் பல பாகங்களிலும் இருந்து வருவதைப் போலவே அவர்களுடைய பிரதிநிதிகளும் உலகின் பல பாகங்களிலும் இருக்கின்றனர். இதில் சென்னை மாநிலத்தில் இருவர் பிரதிநிதிகள். ஒருவர் முன்ஷி முஹம்மது சுல்தான் சாயிபு, சென்னை-இவர்கள் காலமாகிவிட்டார்கள். மற்றொருவர் மவ்லானா முஹம்மது ஸயீது ஸாகிபு,கீரனூர், பழனி தாலுகா,மதுரை ஜில்லா. இப்பெரியார் இன்றையளவும் முக்கிய தப்லீக் இஜ்திமாக்களில் பங்கு பற்றி வருவது குறிப்பிடத்தக்கது' என்றும் இன்னும் பலவிதமாகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள்.

**ஆனால்:**

நாங்களும் மூல நூலாசிரியரைப் பற்றி ஆராய்ச்சி பண்ணிய போது அவர்களால் எழுதப்பட்ட 'ஹிப்ளுல் ஈமான்' என்ற நூலையும் வரவழைத்துப் பார்த்தோம். அதில் 6ம் பக்கத்தில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அறிவை பேயன், பைத்தியக்காரன் மதளைகள், இன்னும் மிருகங்களுடைய அறிவுக்கு ஒப்பானது என்று எழுதியிருக்கிறார். மேலும் அவர்களுடைய சகாக்களான ரஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி இவர்களால் எழுதப்பட்ட 'பறாஹினே காதிஆ' எனும் நூலையும் பார்த்தோம். அந்த நூல் 51-ம் பக்கத்தில் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இபுலீஸ் லயீனை விடவும் அறிவில் குறைந்தவர்கள் என்று எழுதியிருக்கிறார்கள். இன்னும், அவர்களின் மற்றுமொரு சகாவான முஹம்மது காஸிம் நானூத்தவி என்பவர் தனது 'தஹ்தீருன்னாஸ்' என்னும் நூலில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காத்தமுன்னபி-இறுதி நபி-அவர்களுக்குப் பின் வேறு நபியில்லை என்று உம்மத்து முஹம்மதிய்யா நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்துக்கள்) எல்லோர்களாலும் ஏகோபித்து ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவுக்கு மாற்றமாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் ஒரு நபியில்லை, பல நபிமார்களும் வரலாம்-வருவது சாத்தியம் என்றும் எழுதியிருக்கிறார். மேலும் இவர்களெல்லாம் தங்கள் நூல்களில் இப்படி எழுதியிருப்பதினால் இவர்கள் எல்லோர்களும் காபிர்கள், இன்னும் இவர்கள் காபிர்கள் என்பதில் சந்தேகித்தவன்-தயங்கியவனுங் கூட காபிர் என்று மக்கா, மதீனாவிலுள்ள 34 உலமா மேதைகளால் ஏகோபித்து எழுதப்பட்ட மார்க்கத் தீர்ப்பு(பத்வா) கிதாபு '**ஹுஸாமுல் ஹரமைன்**' என்ற நூலையும், இன்னும் அந்த பத்வாவைச் சரிகண்டு இந்தியா, பர்மாவெங்கிலுமுள்ள 268 உலமா மேதைகளாலும் இவர்களெல்லாம் காபிர்களென்று கொடுக்கப்பட்ட மார்க்கத் தீர்ப்பு(பத்வா) கிதாபு 'அஸ்ஸவாரிமுல் ஹிந்திய்யா' எனும் நூலையும் பார்த்தோம். மேலும் தனது நோக்கம் மக்களைத் தொழுகைக்கு அழைப்பதல்ல என்று சத்தியம் சொல்லிவிட்டு தனது நோக்கம் இந்த மூல நூலாசிரியரான அஷ்ரப் அலி தானவியின் நூல்களையும்-கொள்கைகளையும் நாலா பக்கங்களிலும் பிரஸ்தாபப்படுத்தி மக்களிடையே பரத்துவதுதான்

என்று சொல்லிய மவ்லவி இல்யாஸினால் உண்டாக்கப்பட்ட தப்லீக் ஜமாஅத்தில் ஸுன்னத் வல் ஜமாஅத்து மக்கள் ஒருபோதும் சேரவே கூடாது-ஹறாம் என்று வட இந்தியாவிலுள்ள 44 உலமா மேதைகளால் ஏகோபித்து கொடுக்கப்பட்ட மார்க்கத் தீர்ப்பு(பத்வா) கிதாபு **'அல்அதாபுல் பஃஸு அலா றஃஸி இல்யாஸ்'-இல்யாஸ் தலைக்குக் கொடிய வேதனைகள்** என்ற நூலையும் பார்த்தோம்.

**குப்று-ஷரிக்கு பித்அத்து பற்றி ஆராய்ச்சி:**

மூல நூலாசிரியர் குப்ரு-ஷிர்குக்குப் பொருள் எழுதி குப்ரு என்றால் இன்னது ஷிர்கு என்றால் இன்னது என்று விளக்கிக் காட்டியிருந்தால் அவர் சொல்லும் பொருள் ஸுன்னத்து ஜமாஅத்து உலமாக்கள் எழுதக் கூடியதுக்கு நேர்பாடானதுதான? இல்லையா? என்றும் இன்னும் அவர் சொல்லக் கூடிய பொருள்படி பார்க்கிலும் அவர்க காட்டும் கருமங்கள் குப்ரு ஷிர்குடைய கரும்தானா என்றும் ஆராய்ச்சி பண்ண லேசாக இருக்கும். ஆசிரியர் அதைப் பற்றி விளக்கிக் காட்டவில்லை.

தமிழ் மொழிபெயர்ப்பாசிரியரும் தனது குறிப்பில், 'இத்தலைப்பின் கீழ் குறிப்பிட்டுள்ள செயல்கள் பெரும்பாலும் குப்ர்-ஷிர்க்குடன் ஒருவகையால் சம்பந்தப்பட்டவைகளாகும். எனவே இவையும் குப்ர் ஷிர்க்குக்கு காரணமாகின்றன. மேலும், இச் சடங்குகளெல்லாம் காபிரீன்கள், முஷ்ரிகீன்களால் கையாளப்பட்டு வருபவை, இவை சந்தேகிக்கத்தக்க குப்ரு-ஷிர்க்காகவும் விளங்குகின்றன' என்று எழுதியிருக்கிறார். இவரும் குப்ர்-ஷிர்க்கென்றால் எதற்குச் சொல்வது என்று விளங்கவில்லை. மேலும் நூலாசிரியர் பித்அத்தைப் பற்றியும் அது இன்னது என்று விளக்கிக்காட்டாமல், பித்அத்தான கெடுதலான கருமங்கள் இன்னது என்றேதான் எழுதிக் காட்டுகிறார். மேலும் சில கருமங்களை பித்அத்தான கெட்டகருமங்களிலேயும், பெரும்பாவமான கருமங்களிலேயும் இன்னும் குப்ரு ஷிர்க்கான கருமங்களிலேயும் கூட எழுதிக் காட்டுகிறார். தமிழ் மொழிப்பெயர்ப்பாசிரியரும் சரியாக விளக்கிக் காட்டாது பித்அத் என்றால் சரீஅத்தில் எவ்வித ஆதாரமும் இல்லாத ஒரு செயலை அது மார்க்க சம்பந்தமானது என நினைப்பதும், அதனால் நன்மை கிடைக்கிறதென்று நம்புவதுமாகும் என்று எழுதுகிறர். 'பித்அத்' என்பது நினைப்பும், நம்பிக்கையுமாகிய மனதின் தொழிலுக்குச் சொல்லப்படுமென்று சொல்கிறர். அப்படியானால் நூலாசிரியர் பித்அத்தான கருமங்களில் உறுப்புகளால்' செய்யக் கூடிய வேலைகளையும்-இன்னும் முஹர்ரம் மாதத்தில் வெற்றிலை போடாதிருப்பது, மருதோன்றியிலை பூசாதிருப்பது, கற்களுக்கு மிஸ்ஸி தேய்க்காதிருப்பது, கணவன்மார்களுடன் மனைவி கூடாதிருப்பது, சிகப்புத்துணி அணியாதிருப்பது, மனைவி உண்ட தட்டில் கணவனை உண்ணாதிருக்கச் செய்வது போன்ற உறுப்புகளாலும் மனதாலும் கூட ஏற்படாதவைகளையும் சொல்லிக் காட்டுவானேன்! ஆகவே, இங்கு ஈமான், புக்ர், ஷிர்க், பித்அத்து பற்றி ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாக்கள் எழுதுவதை எழுதிக் காட்டுகிறோம். அதைக் கவனமாகப் படித்துப் பார்த்துவிட்டு இந்த நூலாசிரியர் குப்ர், ஷிர்க், பித்அத் கெடுதலான கருமங்களில் எழுதக் கூடிய கருமங்களை எல்லாம் அவை குப்ர் ஷிர்க்கானதுதானா? பிதஅத்து கெடுதலானதுதானா? என்று வாசகர்கள் சிந்தித்துப் பாருங்கள்.

**ஸுன்னத் வல் ஜமாஅத்து கொள்கை:**

**ஈமான், குப்ரு:-** 'ஈமான் என்பது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கொண்டுவந்த எல்லா விஷயங்களிலும் அவர்களை மனதால் உண்மையாக்கி வைப்பதாகும். அதாவது-'லா இலாஹ இல்லல்லாஹு வ இன்னீ ரஸூலுல்லாஹி'- வணக்கத்திற்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர(முஹம்மதுவாகிய) நான் அல்லாஹ்வின் தூதர் என்று அவர்கள் சொன்னதிலும், இன்னும் அவர்கள் தூது கொண்ட வந்து சொன்னது என்று பிரஸ்தாபமாக அறியப்பட்ட எல்லா விஷயங்களிலும் அவர்களை மனதால் உண்மையாக்கி வைப்பதுவுமாகும். இதற்கு மாற்றம் குப்ராகும். அதாவது, 'ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தூது கொண்டு வந்து சொல்லியதில் எதைப்பற்றியாவது அவர்களைப் பொய்யாக்கி வைப்பதாகும்.' இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு'பைஸலத்துதப்ரிகாபை னல் இஸ்லாமி வஸ்ஸந்தகா'(இஸ்லாத்திற்கும் வழிகேட்டிற்கும் இடையில் பிரித்தறிவிக்கும் தீர்ப்பு) என்ற நூல் பக்கம் 80ல் 'பெரும்பாவம் முஃமினான அடியானை ஈமானை விட்டும் அப்புறப்படுத்தாது. ஏனென்றால், ஈமானின் எதார்த்தமான மனநம்பிக்கை இருக்கத்தானே செய்கிறது. முஃதஸிலாக்களுக்கு மாற்றமாக அவர்கள் பெரும்பாவம் செய்தவனை காபிருமில்லை, முஃமினுமில்லை. இவன் இரண்டுக்கும் மத்தயிலுள்ளவன் என்கிறார்கள்.(ஈமானைப் பற்றி) அவர்களின் கொள்கையாகிறது (உறுப்புகளால் செய்யக்கூடிய) அமல்கள் ஈமானின் ஒரு பாகம் என்பதாகும். ஆனாலும் பாவச்செயல் முஃமினான அடியானை குப்ரில் சோர்த்து விடாது என்பதாகும். இன்னும் காரிஜியாக்களுக்கும் மாற்றமாக, அவர்களோ பெரும் பாவம் செய்தவனையும், சிறு பாவம் செய்தவனையும் காபிர் என்று நம்புகிறார்கள்'- ஷரஹு அகாயிதுந் நஸபி-பக்கம் 77.

'முற்றாக வணக்கங்களை விட்டுவிட்டு இருப்பதும், பாவங்கள் அத்தனையையும் செய்வதும் முஃமினான அடியானை ஈமானை விட்டும் போக்கிவிடாது. இதுதான் ஸுன்னத்து வல் ஜமாஅத்து கொள்கையாகும், முஃதஸிலாக்களுக்கு மாற்றமாக.- ஷறஹு பிக்ஹுல் அக்பர்(இமாமுல் அஃளம் அபூ ஹனீபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிக்ஹுல் அக்பர் எனும் நூலுக்கு முல்லா அலிகாரி அவர்களின் விரிவுரை) பக்கம் 207.

அறிந்து கொள்ளுங்கள், ஈமானாகிறது கல்பில் அறிவதும் (உண்மையாக்கி வைப்பதும்), வாயால் விண்ணப்பம் செய்வதும், உறுப்புகளால் அமல் செய்வதுமாகும். பின்னர் ஈமானுக்கு அடிமூடும், கிளைகளுமுண்டு. அடிமூடானது அதை விடுவதனால் அடியான் காபிராகி விடுவானே அதவாகும். அதுவாகிறது- மனதால் அறிவதும் உண்மையாக்கி வைப்துமாகும். இன்னும் விதிவிலக்கான சட்டங்களில் நம்பவேண்டியது அவசியமான எல்லாவற்றையும் நம்புவதுமாகும். அதன் கிளைகளாகிறது- அதை விடுவதனால் அடியான் காபிராகிவிடமாட்டான், என்கிலும் அதில் சிலதை விடுவதினால் பாவியாவான். அதாவது கடமையான தொழுகை மற்றும் கடமையான வணக்கங்களைப் போல் இன்னும் சிலதை விடவதினால் வருசையை(மேன்பாட்டை) விட்டவனாவான். அதாவது ஸுன்னத்தான தொழுகை மற்றும்

ஸுன்னத்தான அமல்களைப் போல. எனவே, ஈமானில் கூடுதல்,குறைவு உண்டாவதெல்லாம் இந்த வித்தில் ஈமானின் கிளைகளிலேயேயாகும். அதன் அடிமூட்டிலில்லை. அடி மூட்டில் குறைவு உண்டாவது குப்ராகும். ஆகவே அடிமூட்டில் கூடுதல் கிடையாது. ஏனென்றால் அடிமூடு(சரியாக இருப்பதற்கு) அவனை மு:மின் என்று சொல்வதற்கு நம்ப Nவுண்டியது அவசியமான அத்தனை கருமங்களையும் அவன் நம்புவது அவசியமாகும்.- இமாம் ஷாபியீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் 'பிக்ஹுல் அக்பர் கலமீ பக்கம் 34.

'வாயால் விண்ணப்பம் செய்வது ஈமானின் ஒரு பாகமில்லை. ஈமானின் எதார்த்தத்தை விட்டும் புறம்பான ஒரு ஷறத்தாகும். இதுதான் அஷ்அரி;ய்யா, மாதுரீதிய்யாக்களில் முஹக்கிகீன்களுடையவும், மற்றவர்களுடையவும் சொல்லாகும். வாயால் விண்ணப்பம் செய்யNவுண்டுமென்பதுவெல்லாம் அனந்திரம், விவாகம், அதன் பின்னால் தொழுவது, அவனுக்குத் தொழுவிப்பது, முஸ்லிம்களுடைய கப்றஸ்தானில் அடக்கம் செய்வது போன்ற மு:மின்களுக்குரிய சட்டங்களை அவன் பேரில் நடத்தாட்டுவதற்கு ஷற்தாகும். ஏனென்றால், மனதில் உண்மையாக்கி வைப்பதுதான் ஈமானாக இருந்தபோதிலும் அது மறைவானதோர் விஷயமாகும். இந்த சட்டங்களை அவன் பேரில் நடத்தாட்டுவதற்கு அந்த மறைவான ஈமானின் பேரில் -மன நம்பிக்கையின் பேரில் அறிவிக்கக் கூடியது அவசியம் தேவைப்படுகிறது. எனவே, கல்பில் மெய்யாக்கி வைத்து, வாயால் விண்ணப்பம் செய்வதற்கு முடியாத(வியாதி போன்ற) தடங்கலோ அல்லது விண்ணப்பம் செய்வதை விட்டும் வேண்டுமென்று விலக்கிக் கொள்வதோ இல்லாமல் சந்தர்ப்பம் அப்படி விண்ணப்பம் செய்வதற்கு இல்லாததினால் வாயால் கலிமாவை சொல்லவில்லையானால் அவன் அல்லாஹ்விடத்தில் மு:மினாக இருக்கும். துனியாவில்(அவன் பேரில் நடத்தாட்டப்பட வேண்டிய) சட்டங்களில் அவன் மு:மின் அல்லன். வாயால் விண்ணப்பம் செய்ய இயலாதவன் வாயால் சொல்லாது போனாலும் சைக்கினை போன்றதைக் கொண்டாவது அவன் முஸ்லிமாக இருக்கிறதன்பேரில் அறிவிக்கக் கூடிய ஆதாரம் இருந்தால் அவன் துன்யாவிலும் மு:மினாவான்'-துஹ்பதுல் முரீது பக்கம் 29.

'(உறுப்புகளால்) அமல் செய்வது ஸுன்னத் வல் ஜமாத்தார்களிடத்தில் ஈமானின் கமாலுக்கு(சம்பூரணத்துக்கு) ஷற்த்தாகும். ஆகவே, அமல் செய்தவன் சம்பூரணத்தை உண்டாக்கி கொண்டான். அமலை விட்டவன் மு:மின்தான். என்கிலும் அவன் தனக்கு (ஈமானின்) சம்பூரணத்தை தப்ப வைத்துக் கொண்டான். ஆனால் அத்தொடு(ஷரீஅத்தில் விலக்கப்பட்டதை)ஆகுமானது என்று எண்ணுவதோ அல்லது அதை ஷரீஅத்தாக்கப்பட்டதில் சந்தேகமோ இல்லையானால்தான் அப்படிக்கல்லையானால்(இவைகளிலேதுமிருந்தால்) ஷரீஅத்திலுள்ளது என்று பிரஸ்தாபமாக அறியப்பட்ட காரியங்களில் அவன் காபிராவான்'- துஹ்பதுல் முரீது - பக்கம் 29.

வாயால் கலிமாவைச் சொல்ல வேண்டுமென்பதெல்லாம் அசலில் காபிராக இருந்து புதுசாக இஸ்லாத்தில் சேர விரும்பியவன் விஷயத்திலேயாகும். முஸ்லிம்களுடைய பிள்ளைகளோ அவர்கள் எகண்டிப்பாக முஸ்லிம்களேயாவர்கள். அவர்கள் வாழ்நாள் முழுவதும் கலிமாவை

மொழியாது போனாலும் அவர்கள் பேரில் உலகத்தில் (முஃமின்களுக்குரிய) சட்டங்கள் நடக்கNவு செய்யும்'-துஹ்கத்துல் முரீது- பக்கம் 28.

ஷிர்கு:- 'ஷிர்க்கானது உலூஹிய்யத்தில் (தெய்வீக இலட்சணங்களில்) அல்லாஹ்வுக்கு கூட்டானவன் இருப்பதாக தரிபடுத்துவதாகும். அதாவது-நெருப்பு வணங்கிகள் வாஜிபுல் உஜூது (தன்னிலைக்குத் தானே ஆதாரமாக சதாவும் இருப்பது அவசியமானவன்) இன்னொருவன் இருக்கிறான் என்று சொல்வது போல், அல்லது விக்கிரகத் தொழும்பர்கள் வணக்கத்திற்குரியவன் வேறொருவனும் இருக்கிறான் என்று சொல்வது போல்'-ஷறஹு அகாயிதுந் நஸபி-பக்கம் 16.

எவன் வணக்கத்திற்குரியவனாக இருக்கிறானோ அவன் வாஜிபுல் உஜூதாகவும் இருக்கிறான். எவன் வாஜிபுல் உஜூதாக இருக்கிறானோ அவன் வணக்கத்திற்குரியவனாகவும் இருக்கிறான். முஷ்ரிகின்களின் அறியாமை அவர்கள் தங்கள் விக்கிரகங்களையும், அவர்கள் வணங்கக் கூடிய வஸ்துகளையும் மும்கினுல் உஜூது (சிருஷ்டிகள்) என்று நம்புவதோடு அவைகளை வணக்கத்திற்குரியவை என்று நம்புகிறார்கள்.

'அவர்கள் அவற்றை வணக்கத்திற்குரியவை என்று நம்புவதுதான் அவர்களை ஷிர்கில் Nசுர்த்துவிட்டது.- அல்லாமா ஸெய்யிது அஹ்மது ஜெய்னி தஹ்லானி மக்கா முப்தி அவர்களின் குலாசதுல் கலாம், அல்லாமா யூஸுபு நபஹானி அவர்களின் 'ஷவாஹிதுல் ஹக்கு- பக்கம் 122.

பித்அத்து: பித்அத்தாகிறது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் நடக்காத ஒன்றைச் செய்வதாகும். அது வாஜிபு, ஸுன்னத்து, ஜாயிஸு, ஹறாம், மக்ரூஹ் என ஐந்து வகைகளாகும். இ(ந்த பித்அத்து எந்த வகையைச் சேர்ந்தது என்ப)தை தெரிந்து கொள்வதற்கு வழியாகிறது, அந்த பித்அத்தை ஷரீஅத்தின் அடிப்படைச் சட்டங்களில் கவனிக்கும்போது என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ, அதுவேதான் அந்த பித்அத்திற்கும் தீர்ப்பாகும். ஹதீது ஷரீபில்-' பித்அத் இடங்கலும் வழிகேடு, வழிகேடு அடங்கலும் நரகத்திலே (வீழ்த்துபவை)யேயாகும் என்று வந்ததற்குக் கருத்து ஹறாமான பித்அத்துகளேதான். மற்றவைகள் அல்ல என்றே பொருள் வைக்க வேண்டும்'-இமாம் இப்னு ஹஜருல் மக்கீ- 'பதாவா ஹதீதிய்யா-பக்கம் 130.

**மூல நூலான 'பெஹிஸ்திஜேவர்' பற்றிய ஆராய்ச்சி:**

'பெஹிஸ்திஜேவர்' நூலாசியர்- ஒருவரைத் தூரத்திலிருந்து (அழைப்பதும்) கூப்பிடுவதும், அவ்வாறு கூப்பிடுவது அவர்களுக்கு விளங்குமென்று நம்புவதும் ஷிர்கு-குப்ருடைய கருமத்தில் உள்ளது என்று எழுதியிருக்கிறார். உலகத்தில் ஒருவர் மற்றவரை எப்பொழுதாவது ஏதாவது ஒரு காரியத்துக்காக கூப்பிடாமல் இருந்திருப்பார்களா? கண்டிப்பாக ஏதாவது கூப்பிட்டுத்தானிருப்பார்கள். ஊமையனும் கூட சயிக்கினையால் எவரையாவது கூப்பிட்டே இருப்பான். இறைவனும் நபி இபுறாகிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்த்து-'ஜனங்களை ஹஜ்ஜுக்காக கூப்பிடும்'-(22-27) என்றும், இன்னும் - 'அ(ந்த பற)வைகளைக் கூப்பிடும் அவை

உம்மிடம் விரைந்து வரும்'-(2-360) என்றும், கூப்பிடும்படி சொன்னான். அப்படியே நபி இபுறாகிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் கூப்பிட்டார்கள். இன்னும் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் தங்கள் மகனை கூப்பிட்டு, 'மகனே! எங்களோடு(கப்பலில்) ஏறு(என்றார்கள்)'-(11-42)

கூப்பிடுவது ஷிர்கு, குப்ராக ஆகுமேயானால் கூப்பிடும்படி சொல்வது ஷிர்கு குப்ராகவேதானாகும். எனவே நூலாசிரியரின் கூற்றுப்படி எவரையாவது கூப்பிட்டவர்கள் அத்தனை பேர்களும்- மகனைக் கூப்பிட்ட நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களும்- ஜனங்களையும், இறந்த பறவைகளையும் கூப்பிட்ட நபி அபுறாகிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும்- அவர்களை அப்படிக் கூப்பிடும்படி ஏவிய இறைவன் ஹக்குதஆலாவுங் கூட முஷ்ரிகாக-காபிராகவேதான் ஆவார்கள்.(நவூது பில்லாஹி மின்ஹா-இம்மாதிரி சொல்வதை விட்டும் அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக!)

**உருவப்படம் வைப்பது:**

நூலாசிரியர் உருவப்படம் வைப்பதையும் ஷிர்கு-குப்ருடைய கருமத்தில் உள்ளது என்று எழுதியிருக்கிறார். இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதனிடமும் உருவப்படம் இல்லாமலிருக்காது. ஆம்! பத்திரிகையகளில் உருவப்படம், நாணயங்களில் உருவப்படம்,. எந்த மனிதனாவது இவைகளில் ஏதாவதொன்;றை எந்த நேரத்திலாவது வைத்திருக்காமலிருப்பானா? எந்த மனிதனும் எந்த நேரத்திலாவது இவைகளில் ஏதாவதொன்றை வைத்துதானே இருப்பான். நூலாசிரியரின் கூற்றுப்படி அவைகளையோ, அவைகளில் ஒன்றையோ வைத்திருந்த அத்தனை பேர்களுமே முஷ்ரிகுகளும், காபிர்களுமே ஆவார்களல்லவா? மேலும் மூல நூலின் மகிமைளை அறிந்து அதை எப்படியாவது(தமிழில்) மொழிபெயர்க்க வேண்டுமென்ற தனது நீண்ட நாள் அவாவின்படி பிரயாசைப்பட்டு மொழிபெயர்த்து, பல பெரியார்களிடம் மதிப்புரைகள் வாங்கித் தானும் பதிப்புரை எழுதிய மவுலவி அபுல்ஹசன் சாதுலி அவர்களும், அந்த நூலை மொழி பெயர்க்க கடைசிவரையும் ஒத்துழைத்து மதிப்புரை எழுதியவருமான மவுலவி பீ.ஏ. கலீலுற்றஹ்மான்(ரியாஜி) அவர்களும் கொழும்பு(இலங்கை) '**தினகரன்**' பத்திரிகை ஆபிஸுக்குப் போய்(போட்டோ) உருவப்படம் எடுத்து அதை மேல்படி 'தினகரன்' பத்திரிகையில் **1967** செப்டம்பர் 7ம் திகதி பிரசுரித்திருப்பதையும் நாம் கண்ணுற்றோம். அவ்விருவர்களும் தங்கள் உருவப்படங்களைத் தங்கிளடம் வைத்திருக்காமலேயே இருந்தபோதிலும் அந்த உருவப்படத்தைப் பிடிக்கும்படியாகவும், வைக்கும்படியாகவும் செய்தார்களா இல்லையா? அதைப் பிடிக்கவும் மக்கள் அதை வைக்கவும் பிரியப்பட்டார்களா? இல்லையா? ஷிர்க்கான கருமத்தை விரும்புவதும், பிறரைக் கொண்டு இதை செய்விப்பதும் ஷிர்க்குதானே! இப்போது இவர்கள் எப்படியாக ஆகிறார்கள்? ' நவூதுபில்லாஹி மின்ஹா'.

**கோரிக்கைகளை வேண்டுவது:-**

நூலாசிரியர்(அல்லாஹ் அல்லாமல்) வேறெவரிடமாவது கோரிக்கைகளை வேண்டுவதும் ஷிர்க்கு குப்ருடைய கருமத்திலுள்ளது என்று எழுதியிருக்கிறார். இவ்வுலகத்தில் யார்தான்

பிறரிடம் தமது கோரிக்கைகளை வேண்டாமல் இருக்கிறார்கள்? அப்படியிருக்கவும்தான் முடியுமா? ஜனங்கள் அவுலியாக்களிடம் தங்கள் கோரிக்கைகளை வேண்டுகிறார்கள். பாருங்கள்.

உங்களில் யாராவது ஒரு வஸ்துவை களவு கொடுத்துவிட்டானேயானால் அல்லது உதவி வேண்டுமென்று விரும்புவானேயானால் அல்லாஹ்வுடைய அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்கட்டும்.-(திர்மதி) என்று அவுலியாக்களிடம் தங்கள் கோரிக்கைகளை வேண்டும்படியாக அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மக்களை ஏவியிருக்கிறார்கள்.

இன்னும், நபி ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், 'கூட்டங்களே! அவளுடைய(பல்கீஸுடைய) சிம்மாசனத்தை அவர்கள் என்னிடம் முஸ்லிம்களாக வருவதற்கு முன்னால் என்னிடம் யார் கொண்டு வருவார்?'-27:38 என்று தங்கள் கெரிக்கையை தங்கள் பிரஜைகளிடத்தில் கேட்டார்கள். ஷெய்குனா கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் முரீதீன், முஹிப்பீன்களை எந்த கஷ்டங்களைவிட்டும் காப்பாற்றுவேன், அவர்களுக்கு உதவி செய்வேன், எந்த கஷ்டமான சமயத்திலும் என்னிடம் உதவி தேடுங்கள்' என்று சொல்கிறார்கள். இன்னும் முஹம்மது பாஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்,' அலா அய்யுஹல் மத்ஹூபு'..... துக்க சாகரத்தில் ஆழ்ந்தவனே! நீ கஷ்டத்தில் தவிப்பாயேயானால் யா பாஸீ! என்னைக் கூப்பிடு. நான்(உதவிக்கு) உன்னிடம் விரைந்து வருகிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். நூலாசிரியரின் கூற்றுப்படி இவர்கள் எல்லோர்களும் முஷ்ரிகுகளாகவும்-காபிர்களாகவும் ஆவார்கள். 'நவூதுபில்லாஹி மின்ஹா'.

**பேர் வைப்பது:**

மேலும் நூலாசிரியர்- 'அலிபக்ஷ், ஹுஸைன் பக்ஷ், அப்துந் நபி(அப்துற்றஸூல்) போன்ற பெயர்களை வைப்பதும் ஷிர்கு, குபிருடைய கருமத்திலுள்ளது' என்று சொல்கிறார். அவருடைய இந்த வார்த்தைக்கு ஒருவரை அல்லாஹ் அல்லாதவருடைய பக்ஷ், குலாம், அப்து, பிச்சை, பயல், அடிமை என்று பொருள்படும்படியான பெயர்களைச் சொல்லி அழைப்பதுதான் என்று வைத்துக் கொண்டால்,

குர்ஆனில்,' உங்களுடைய அடிமைகளிலிருந்தும் அடிமை பெண்களிலிருந்தும் ஸாலிஹானவர்களுக்கு நிகாஹ் செய்து வையுங்கள்'-(24:32) என்ற இறைவன் சொல்கிறான். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் ஒரு யுத்தத்தில், 'அனந் நபிய்யுலாகதிபு அனப்னு அப்துல் முத்தலிபு-(நான் நபி, பொய்யனில்லை. நான் அப்துல் முத்தலிபுடைய பேரன்' என்று சொன்னார்கள். அல்லாஹுத்தஆலா எங்கள் குலாம்களை எங்கள் அப்துகள் என்று சொல்கின்றான். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் பாட்டனாரை முத்தலிபுடைய அடிமை என்று சொல்கிறார்கள். நூலாசிரியரின் கூற்றுப்படி அப்துந்நபி, குலாம் றஸூல் போன்ற பெயர்களைச் சொல்லி ஒருவரைக் கூப்பிட்டவர்கள் அத்தனை பேர்களுனம், றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்

அவர்களும், இறைவன் ஹக்குத்தஆலாவும் முஷ்ரிகாகவே ஆகிறார்கள். நவூதுபில்லாஹி மின்ஹா.

இன்னும்

நூலாசிரியர்-'ஒருவருக்கு முன்னால் ஆடாமல் அசையாமல் நிற்பதும், ஒருவருக்கு முன்னால் குனிவதும், ஒருவருக்கு முன்னால் சுஜூது செய்வதும், ஷிர்கு குபுருடைய குருமங்களிலுள்ளது என்று எழுதியிருக்கிறார்.

குர்ஆனில்-'நாம் மலாயிகத்துகளிடம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூது செய்யும்படி சொன்னோம். அவர்களெல்லோர்களும் ஸுஜூது செய்தார்கள், இபலீஸைத் தவிர. அவன் பெருமை அடித்து விலகிக் கொண்டான்'-(2:43) என்றும், 'நபி யூஸுபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் தாயார் தகப்பனார் யாகூபு அலைஹிஸ்ஸலாம் இருவர்களையும் சிம்மாசனத்தில் ஏற்றினார்கள். அவர்களெல்லோர்களும் நபி யூஸுபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூது செய்தவர்களாக விழுந்தார்கள்'-(12-100) என்றும் வந்திருக்கிறது.

முபஸ்ஸரீன்களில் சிலர் '**ஸுஜூது**' என்பதைக் கொண்டு கருத்து தலைகுனிவது என்றும், இன்னும் சிலர் நெற்றியைப் பூமியில் வைத்து ஸுஜூது செய்வதுவேதான் என்றும் அந்த ஸுஜூது மரியாதைக்காகச் செய்த ஸுஜூது, வணக்கத்திற்காக செய்த ஸுஜூது அல்ல. வணக்கத்திற்காகச் செய்கிற ஸுஜூது எல்லா ஷரீஅத்திலும் விலக்கப்பட்டதாகும். மரியாதைக்காகச் செய்கிற ஸுஜூது முந்திய ஷரீஅத்தில் ஆகுமானதாக இருந்தது.நம்முடைய ஷரீமத்தில் ஹறாமாக இருக்கும். ஷிர்கு-குப்ரு அல்ல என்று சொல்கிறார்கள் எப்படியானாலும் யூஸுபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவர்களது தகப்பனாரும், தாயாரும், சகோதரர்களும் ஸுஜூது செய்தார்கள். அல்லது தலைகுனிந்தார்கள். மலாயிகத்துகள் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூது செய்தார்கள். அவர்களை ஸுஜூது செய்யும்படி அல்லாஹுதஆலாவேதான் ஏவினான். நூலாசிரியரின் கூற்றுப்படி நபிமார்களும், மலாயிகத்துகளும், இறைவனும் கூட காபிர்கள்,முஷ்ரிகுகள் ஆகிறார்கள். 'நவூதுபில்லாஹி மின்ஹா.'

இன்னும், நூலாசிரியர் 'பூமுக்காடு போடுவதையும், பூமாலை போடுவதையும் ஷிர்கு-குப்ருடைய கருமங்களிலுள்ளது' என்று காட்டுகிறார். முடிவாக இவர் குப்ரு-ஷிர்குடைய கருமங்களென்று காட்டியிருக்கிற மற்றக் கருமங்களையும் பற்றி இப்படியே ஆராய்ச்சி செய்து பார்ப்போமேயானால் உலகிலுள்ளவர்கள் அத்தனை பேர்களும், நபிமார்களும். மலாயிகத்துகளும் காபிர்கள், முஷ்ரிகுகளாக ஏன் சர்வ சிருஷ்டிகளையும் படைத்தாளும் அல்லாஹு ஜல்ல ஷானுஹூ அவனும் கூட காபிராகவும் முஷ்ரிகாகவுமேதான் ஆகிறார்கள். என்கிலும் இபுலீஸ் ஒருவன்தான் மிச்சப்படுவான். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இந்த விதமாக ஒரு பேயனும் பைத்தியக்காரனும் கூட சொல்லமாட்டானே! அப்படியிருக்க ஹகீமுல் உம்மத், மெஞ்ஞானி, மவுலானா, மவுலவி, அக்காலத்து கஸ்ஸாலி, மஜத்திது, குத்பு என்றெல்லாம் தமது சகாக்களால் புகழப்பட்டுள்ள பெஹஸ்திஜேவர் ஆசிரியர் ஏன்

இப்படியெல்லாம் உளறிக் கொட்டியிருக்கிறார்? என்று சிந்தித்துப் பார்த்தால் உண்மை புலப்படாமல் போகாது.

**பெருமையின் விளைவே:**

இறைவன் மரியாதைக்காக நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூது செய்யும்படி இட்ட கட்டளைக்கு இபுலீஸ் பெருமையடித்து ஸுஜூது செய்ய மறுத்ததனால் அவனுக்கு ' அவன் காபிரீன்களில் நின்றுமுள்ளவன்' என்று இறைவன் தீர்ப்பு கூறியதும் 'இபுலீஸ்', 'நான் ஆதமுடைய மக்களையெல்லாம் வழிகெடுப்பேன்' என்று வீறாப்பாக பேசியதுபோல் மேல்படி நூலாசிரியரும், எம்பெருமானார் நபிகளுக்கெல்லாம் ஸர்தாரான-அகில லோகத்தையும் படைக்கக் காரணகர்த்தாவான- அருமை நாயகம் அஹ்மது முஸ்தபா – முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மரியாதை செய்யாதது மட்டுமல்ல, அவர்களுடைய அறிவை Nபுயன், பைத்தியக்காரன், மதளை, மிருகங்கள் முதலானதுகளின் அறிவுக்கு ஒப்பாக்கி அவர்களைக் கடுமையாகத் தூஷனித்துத் திட்டி ஏசியதினால் காபிராக நரக வேதனைக்கு ஆளானதைப் பொருத்து மார்க்க அறிஞர்களான உலமா மேதைகளெல்லார்களாலும் அவரைக் **'காபிர்'** என்று சொல்லத்த தயங்கியவனும்-சந்தேகித்தவனும் கூட **'காபிராவான்'** என்றும் மார்க்கத் தீர்ப்பு(பத்வா) கொடுத்ததினால் இவரும் இபுலீஸைப் போல ஆதமுடைய மக்களான உலகிலுள்ள உண்மை முஸ்லிம்களையெல்லாம் வழிகெடுக்க வேண்டுமென்ற ஆணவத்தினாலேNயுதான் இப்படிக் கண்டபடியெல்லாம் எழுதியிருக்கிறார் என்ற முடிவுக்கேதான் வரவேண்டியதாய் இருக்கிறது.

முஸ்லிம் சோதரீர்!

மேல்படி நூலாசிரியரின் எழுத்துக்களை-நூல்களை பார்த்துவிட்டு பொறுப்பற்ற முறையில் எந்த ஒரு முஸ்லமையும் 'காபிர்' முஷ்ரிகு' என்று சொல்லி விடாதீர்கள். ஏனெனலில் ஒரு முஸ்லிம் நின்றும் எவ்வித சந்தேகத்திற்குமிடமில்லாது தெளிவான முறையில் குப்ரியத்தான - ஷிர்க்கான கருமம் நடவாமலிருக்கும் போது அவனைக் 'காபிர், முஷ்ரிகு' என்று எவனாவது சொன்னால் சொன்னவன் காபிராகி விடுவான். கிருபையுள்ள நாயன் நம்மனைவரையும் அம்மாதிரி பொறுப்பற்ற முறையில் எந்த முஸ்லிமையும், **'காபிர், முஷ்ரிகு'** என்று சொல்வதை விட்டும் காப்பாற்றுவானாக! ஆமீன்.

**வேண்டுகோள்:**

இறுதியாக அந்த 'பெஹஸஜ்திஜேவர்' என்ற நூலை மொழி பெயர்த்து 'சுவர்க்க நகைகள்' என்று பெயரிட்டவர்கள்- அதை நல்லதெனக் கண்டு அதற்கு மதிப்புரைகள்-சிறப்புரைகள் எழுதியவர்களான உலமாக்களாகிய உங்களிடத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறோம். நீங்கள் அந்த நூலை நன்றாகப் படித்துணர்ந்து அதில் எழுதப்பட்ட ஒவ்வொரு விஷயங்களையும் சரியெனக் கண்டுதானா மதிப்புரை-சிறப்புரைகள் எழுதிக் கொடுத்தீர்கள்? அப்படியானால், அந்த நூலாசிரியரால்- குப்ரு, ஷிர்குகளான கருமங்கள் என்று கூறப்பட்டவைகள் குப்ரு-ஷிர்கான கருமங்கள்தான் என்பதற்கும், பாவமான பித்அத்தன கருமங்கள் என்று

காட்டப்பட்டவைகள் கெட்ட பித்அத்துகள் என்பதற்கும் ஸுன்னத்து வல் ஜமாஅத்து உலமாக்களாகிய இமாம்களின் நூல்களிலிருந்து தக்க ஆதாரங்களைக் காட்டுங்கள். அல்லது நீங்கள் அந்த நூலை சரியாக வாசித்துப் பார்க்காமல் உங்களிடம் அதைப்பற்றி விலாகித்துப் பேசியவர்களின் பேச்சைந ம்பிதான் அதற்கு அவ்விதம் தவறாக மதிப்புரை-சிறப்புரைகள் கொடுத்தீர்களா? அப்படி தவறாகத்தான் கொடுத்திருந்தீர்களேயானால் அதைப்பற்றி ஆட்சேபித்து பத்திரிகை மூலம் பகிரங்கமாக வெளியிடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு ரஹ்மத்துச் செய்வானாக! ஆமீன். அவ்விதம் நீங்கள் செய்யவில்லையேயானால் நிச்சமாக 'சுவர்க்க நகைகள்' என்று நீங்கள் அறிமுகம் செய்து வைத்துள்ள நரக விலங்குகளில் முஸ்லிம்கள் மாட்டிக் கொள்ளார்கள் என்பதையும் இத்தால் நினைவூட்டுகிNறோம். அல்லாஹ் காப்பாற்றுவானாக! ஆமீன்.

*முற்றும்.*

www.sufimanzil.org